# பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் அதிபர் புடின் உடன் பேசினார்

ஆகஸ்ட் 08, 2025

பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று மாண்புமிகு ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் அவர்களுடன் தொலைபேசியில் உரையாடினார்.

சமீபத்தில் நடந்த உக்ரைன் பிரச்சனைகள் குறித்து பிரதமர் அவர்களுக்கு அதிபர் புடின் விளக்கினார்.

அதிபர் புடின் அவர்களின் விரிவான மதிப்பீட்டிற்கு நன்றி தெரிவித்த பிரதமர், பிரச்சனையை அமைதியான முறையில் தீர்ப்பதற்கான இந்தியாவின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

இரு தலைவர்களும் இருதரப்பு நிகழ்ச்சி நிரலில் முன்னேற்றத்தை ஆய்வு செய்தனர், மேலும் இந்தியா மற்றும் ரஷ்யா இடையே சிறப்பு மற்றும் பிரத்யேக உத்திசார் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதற்கான அவர்களின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினர்.

இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடக்கும் 23வது இந்தியா-ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள நமது பிரதமர் அதிபர் புடினை இந்தியா வருமாறு அழைத்தார்.

புது தில்லி

ஆகஸ்ட் 08, 2025